# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

*தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (தே.நு.வி.சு 2013=100) அளவிடப்படுகின்ற பொது விலை மட்டமானது 2020 சனவரியில் அதிகரித்ததுடன் ஏப்பிறல் வரை வீழ்ச்சியடையும் போக்கொன்றினை நோக்கி அசைவடைந்ததுடன் அதன் பின்னர் உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகளுக்கேற்ப அதிகரித்தது. உணவு வகைக்குள், தளம்பலடையும் உணவுப்பொருட்களின் விலைகள் கலப்பான அசைவுகளை வெளிப்படுத்தியிருந்த போதும் ஏனைய உணவுப்பொருட்களின் விலைகள் 2020 இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிக்கும் போக்கொன்றினை வெளிப்படுத்தியிருந்தது. ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் முக்கியமாக நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான குறைவான கேள்வி மற்றும் நிர்வாக சார் விலைகளினுடைய சீராக்கமின்மை காரணமாக உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2020 ஏப்பிறலில் இருந்து யூன் வரையான காலப்பகுதியில் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கமானது நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு மேலே காணப்பட்டது. அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (கொ.நு.வி.க, 2013=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்ததினால் அளவிடப்பட்ட முதன்மைப்பணவீக்கமானது 2020 இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 4 - 6 சதவீத எதிர்பார்க்கப்பட்ட எல்லைக்குள் பரந்து காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் இரண்டின் அடிப்படையில் ஆண்டிற்கு ஆண்டு மையப்பணவீக்கமானது நிலையான மட்டங்களில் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டைவிட குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை, நிறுவனத்துறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2020 இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மிகவும் இறுக்கமாக காணப்பட்டது. கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் எதிரான தாக்கங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் காணப்படும் கட்டமைப்பு ரீதியிலான பிரச்சினைகள் 2020 இன் முதல் அரைப்பகுதியில் தொழிற்சந்தைக் குறிகாட்டிகள் மோசமடைவதற்கு வழிவகுத்தன. அதேபோல, தொழிற்படை பங்கேற்பு விகிதம் மற்றும் தொழில் புரியும் குடித்தொகையானது 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. தொழில்புரியும் குடித்தொகையின் வீழ்ச்சிக்கேற்ப, தொழிலின்மை விகிதமானது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் 5.6 சதவீதமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தது. அதேபோக்கினைத் தொடர்ந்து, பெண்கள், இளைஞர்கள் மற்றும் கல்வித்தகைமை பெற்ற ஆட்களுக்கிடையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் தொழிலின்மை உயர்மட்டத்தில் காணப்பட்டது. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான வெளிச்செல்லுகைகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலுக்கு மத்தியில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் 2019 இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது.*

## 2020இல் அபிவிருத்திகள்

### விலைகள்

#### பொது விலை மட்டத்தின் அசைவுகள்

- **பொது விலை மட்டமானது 2020 சனவரியில் அதிகரித்து அதன் பின்னர் ஏப்பிறல் வரை வீழ்ச்சியடையும் போக்கொன்றினை கொண்டிருந்து அதன்பின்னர் அதிகரித்தது.** பொது விலை மட்டத்தினை அளவிடுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு., 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு., 2013=100)[1] ஆகிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டும் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகளுடன் இசைந்து அசைவடைந்தது. உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகளின் நடத்தையானது கொவிட்-19 நோய்த்தொற்றினைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததுடன் 2020 காலப்பகுதியில் கலப்பான அசைவுகளை வெளிக்காட்டின. ஆயினும், உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் சனவரியிலிருந்து மாச்சு வரையான காலப்பகுதியில் அதிகரிக்கும் உத்வேகமொன்றினை வெளிப்படுத்தியிருந்ததுடன், அதே பொருட்களின் விலைகள் 2020 ஏப்பிறலிற்கும் யூனிற்கும் இடையில் பரந்தளவில் நிலையானதொரு நடத்தையினை வெளிப்படுத்தியதுடன் முடக்கக் காலப்பகுதியில் அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கு குறைந்த கேள்வி காணப்பட்டது. எனினும், உணவல்லா வகையில் உள்ள பொருட்களின் விலைகள் யூலை 2020 தொடக்கம் அதிகரித்தது.


- **2020இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியை கருத்திற்கொள்கையில் தளம்பலடையும் உணவானது[2] ஆண்டின் தொடக்கத்தில் அதிகரித்திருந்ததுடன் 2020 மே வரை வீழ்ச்சியடையும் போக்கொன்றினை நோக்கி அசைவடைந்து அதன்பின்னர், ஒட்டுமொத்தமாக அதிகரிக்கும் போக்கொன்றினைத் தொடர்ந்தது.** 2020 சனவரியில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பானது முக்கியமாக மரக்கறிகள், தேங்காய் மற்றும் சிவப்பு வெங்காயம் என்பனவற்றின் விலை அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. எனினும், 2019 ஏப்பிறலிலிருந்து காணப்பட்ட தொடர்ச்சியான அதிகரிக்கும் போக்கிற்கு மாறாக, தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2020 பெப்புருவரியில் வீழ்ச்சியடைந்ததுடன் அரிசி, மரக்கறிகள், சிவப்பு வெங்காயம், பெரிய மீன், இறைச்சி மற்றும் பச்சை மிளகாய் ஆகிய பொருட்களின் விலை வீழ்ச்சி காரணமாக 2020 மே வரை அதன் வீழச்சியடையும் போக்கு தொடர்ந்தும் காணப்பட்டது. 2020 யூனில் தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பானது முக்கியமாக அரிசி, மரக்கறிகள், உடன் மீன் மற்றும் இறைச்சி போன்ற பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு காரணமாகின. எனினும், இந்த அதிகரிக்கும் போக்கானது 2020 யூலையில் தலைகீழாக மாற்றமடைந்ததுடன் அரிசி, தேங்காய், மரக்கறிகள் மற்றும் வெங்காயத்தின் விலை வீழ்ச்சிக்கு காரணமாகின. அதற்குமாறாக மரக்கறி, தேங்காய், பெரிய வெங்காயம் மற்றும் பழங்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பு காரணமாக தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதன்பின்னர் 2020 செத்தெம்பர் வரை அதிகரித்திருந்தது. தெரிவுசெய்யப்பட்ட தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலை அசைவு அவதானிக்கப்பட்ட போது, கொவிட்-19 நோய்த்தொற்றுப் பரவலினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முடக்குதல் காலப்பகுதியில் விலைகளின் அதிகரிப்பிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு 2020இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் அரிசி வகைகளின் விலைகளில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சம்பா, நாடு மற்றும் கெகுளு அரிசி மீது முறையே ரூ.90 மற்றும் ரூ.93 உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் 2020 ஏப்பிறல் 10 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிர்ணயிக்கப்பட்டதுடன் ரூ.98, ரூ.96 மற்றும் ரூ.85 ஆன மேல்நோக்கிய திருத்தமானது 2020 மே 28 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2020இன் முதல் ஒன்பது மாதகாலப் பிற்பகுதியில் சந்தையில் சிறுபோக அறுவடைப் பெறுகைக்கு மத்தியிலும் சம்பா அரிசியின் நிரம்பலில் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. 2019 இற்கு மாறாக, மே மற்றும் யூலையைத் தவிர 2020இல் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தேங்காயின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டதுடன்

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தேநுவிசு, 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு 2013=100) ஆகிய அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்களை மாதாந்த அடிப்படையில் தொகுக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தேசிய ரீதியில் வீட்டுத் துறையினுடைய தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் விலை அசைவுகளைக் குறிக்கின்ற அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது அவற்றில் கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்ப்புற வீட்டலகினைப் பிரதிபலிக்கின்றது.

2 தளம்பலடையும் உணவானது அரிசி, இறைச்சி, உடன் மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயங்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கை உள்ளடக்குகிறது.

வரைபடம் 4.1

விலைகளின் அசைவுகள் மற்றும் தொழிற்படைச் சந்தைப் போக்குகள்



அதன்பின்னர், 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் நிலவிய விலைகள் மேலானதாகக் காணப்பட்டன. அதன் காரணமாக, 2020 செத்தெம்பர் 25 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், 12 அங்குலத்திற்குக் குறைவான, 12 - 13 இற்கும் இடைப்பட்ட அங்குலம் மற்றும் 13 அங்குலத்திற்கு மேலாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தேங்காயின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் முறையே ரூ.60, ரூ.65 மற்றும் ரூ.70 ஆக நிர்ணயிக்கப்பட்டன. 2020 பெப்புருவரி, மாச்சு மற்றும் ஏப்பிறலில் பெரிய வெங்காயத்தின் விலைகள் 2014இலிருந்து தொடர்புடைய மாதங்களில் நிலவிய விலைகள் மிகவும் உயர்வாகக் காணப்பட்டதுடன், உயர்வான விலைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் 2020 பெப்புருவரி 23 மற்றும் 2020 மாச்சு 18இலும் நடைமுறைக்குவரும் வகையில் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை முறையே ரூ.190 மற்றும் ரூ.150 ஆக நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் வலியுறுத்தியது. மேலும், முக்கியமாக பன்னாட்டுச் சந்தையில் குறைந்த விலைகள் காரணமாக பெரிய வெங்காயத்தின் விலைகள் 2020 ஏப்பிறலிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடையும் போக்கொன்றினைப் பின்பற்றின. அதன்பின்னர், அறுவடைச் சேதங்கள் மற்றும் 2020 செத்தெம்பர் 15இல் நடைமுறைக்குவரும் வகையில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதித் தடையினால் உள்நாட்டு உற்பத்தியில் காணப்பட்ட வீழ்ச்சி காரணமாக பெரிய வெங்காயத்தின் விலைகள் அதிகரித்தன. அதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் மீதான விசேட பொருட்கள் மீதான தீர்வை 2020 மே 01 மற்றும் 2020 ஓகத்து 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முறையே ஒரு கிலோகிறாமிற்கு ரூ.15 மற்றும் ரூ.50 இற்கு அதிகரித்திருந்தது. எனினும், நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலின் அபாயத்தினுடைய மீள்வெளிப்பாட்டுடன் உருவாகிய சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் 2020 ஒத்தோபர் 14இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் சிறப்புப் பண்டத் தீர்வையை அரசாங்கமானது கீழ்நோக்கி 25 சதத்தினால் திருத்தியமைத்தது. மேலும், சிவப்பு வெங்காயத்தின் விலைகள் ஆண்டின் தொடக்கத்தில் அண்மைய கடந்த காலங்களில் அது உயர்வாகக் காணப்பட்டதுடன் 2020இன் முதல் ஒன்பது மாத முடிவில் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்த போதிலும் 2020 மே 22 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் சிறப்புப் பண்டத் தீர்வை ஒரு கிலோகிறாமிற்கு ரூ.50ஆல் அதிகரித்தது. 2020இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உருளைக்கிழங்கின் விலைகள் அண்மைய ஆண்டுகளின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட விலை மட்டங்களைவிட அதிகமாகக் காணப்பட்டதுடன் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது ஒரு கிலோகிறாமிற்கு முறையே ரூ.50 மற்றும் ரூ.55 ஆக 2020 மே 22 மற்றும் 2020 ஓகத்து 15 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதிகரிக்கப்பட்டது.

- **உணவு வகையினுள் தளம்பலடையும் உணவு தவிர்ந்த பொருட்களுடைய விலைகள் 2020இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிக்கும் போக்கொன்றை நோக்கி அசைவடைந்ததுடன் 2020 மாச்சில் மட்டும் சிறிதளவான வீழ்ச்சியொன்றினை வெளிப்படுத்தியது.** இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலையுடன் இணைந்து செல்லும்வகையில் 2020 ஏப்பிறல் 28 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 400 கிறாம் பக்கற்றொன்றிற்கான உள்நாட்டுப் பால்மாவின் விலையினை ரூ.345 இலிருந்து ரூ.380ஆக அதிகரிக்கப்பட்டது. எனினும், 2019இல் பல விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலை 2020இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டது. கொவிட்-19 நோய்த்தொற்றினைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய நிலைமைகளினால் நுகர்வோருக்கான நிவாரண ஏற்பாடுகளாக பருப்பு ஒரு கிலோகிறாமிற்கு ரூ.65 மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 425 கிறாம் ஒன்றிற்கு ரூ.100 இனை உயர்ந்தபட்ச சில்லறை விலைகளாக 2020 மாச்சு 18 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் விதிக்கப்பட்டதுடன் முடக்குதல் கட்டுப்பாடுகளின் தளர்வுடன் 2020 ஏப்பிறல் 30 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நீக்கப்பட்டது. பின்னர், பருப்பு மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீனுக்கான விசேட பொருட்கள் மீதான தீர்வையானது முறையே ஒரு கிலோகிறாமிற்கு ரூ.10 மற்றம் ரூ.100 ஆக 2020 மே 22 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதிகரிக்கப்பட்டது. முடக்குதல் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நிவாரண வழிமுறையாக முட்டை விலைகள் ஒவ்வொன்றும் ரூ.10ஆக 2020 மாச்சு 23 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் குறைக்கப்பட்டதுடன் இந்த ஆண்டின் ஆகக் குறைந்த முட்டை விலை 2020 ஏப்பிறலில் பதிவுசெய்திருந்தது. 2020 மே தொடக்கம், முட்டையின் விலைகளில் தொடர்ச்சியான

அதிகரிக்கும் போக்கொன்று காணப்பட்டதுடன் முட்டை ஒன்றிற்கான விலையினை ரூ.2 இனால் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை 2020 செத்தெம்பர் 07 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தேவைப்படுத்தப்பட்டது. மக்காச் சோளம் தொடர்பில் ஓர் பற்றாக்குறையை உருவாக்கி பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி விலைகளை அதிகரிப்பதற்கான ஓர் முயற்சி மேற்கொள்ளப்படலாம் என முன்னதாகவே தெரிந்துகொண்டதனால் பிறொயிலர் இறைச்சி (தோலுடன்) மற்றும் இறைச்சி (தோல் இல்லாமல்) முறையே ரூ.430 மற்றும் ரூ.500ஆக 2020 மாச்சு 12 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் விதிக்கப்பட்டது. ஆயினும், 2020 ஏப்பிறலில் கோழி இறைச்சியின் விலைகள் வீழ்ச்சியடைந்ததுடன் அதன்பின்னர் விலைகளில் அதிகரிக்கும் போக்கொன்றினை வெளிப்படுத்தியது. மேலும், சோளத்தின் உயர்ந்தபட்ச விலையாக ஒரு கிலோகிறாமிற்கு ரூ.55 ஆக 2020 மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் கொண்டுவரப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்கள் மீது விசேட பொருட்கள் மீதான தீர்வை 2020 மே 22 இலிருந்து மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டதுடன் அவற்றுள் சீனி, தயிர், பூடு, செத்தல் மிளகாய் மற்றும் சோளம் மீது சிறப்புப் பண்டத் தீர்வை முறையே ஒரு கிலோ கிறாமிற்கு ரூ.50, ரூ.800 ரூ.50, ரூ.100 மற்றும் ரூ.25ஆக மேல்நோக்கி திருத்தியமைக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 2019 திசெம்பர் 06 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவாக உயர்வடையும் விலைகளை குறைப்பதற்கு 2020 ஏப்பிறல் 21 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஒரு கிலோகிறாம் மஞ்சள் தூ ளின் உயர்ந்தபட்ச சில்லறை விலை ரூ.750ஆக விதிக்கப்பட்டது. இத்தகைய முயற்சிகள் தவிர, உள்நாட்டு வழங்கல் மற்றும் கேள்விக்கு இடையில் கணிசமான இடைவெளி காரணமாக அடுத்தடுத்த மாதங்களில் மஞ்சள் தூளின் விலைகள் அதிகளவில் உயர்வடைந்ததன் காரணமாக 2020 செத்தெம்பர் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அரசாங்கமானது உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை நீக்கியது. அதேவேளை, மீளாய்விற்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில் கோதுமை மாவின் விலைகள் நிலையானதாகக் காணப்பட்டது. நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோயத்தொற்றின் பரவலின் அபாயத்தின் மீள்தோற்றப்பாட்டுடன் ஏற்பட்ட சிரமங்களைக் கருத்திற்கொண்டு பருப்பு, தகரத்திலடைக்கப்பட்ட மீன், மற்றும் சீனி ஆகிய பல்வேறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது சிறப்புப் பண்டத் தீர்வை 2020 ஒத்தோபர் 14 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் கிலோகிறாமொன்றிற்கு 25 சதங்கள் கீழ்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டது.

- **நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் போக்குவரத்துக் கட்டணம், தொடர்பூட்டல் கட்டணங்கள், மின்வலு மற்றும் நீர்க் கட்டணங்கள் போன்ற நிர்வகிக்கப்படும் விலைகளின் திருத்தியமைக்காததுடன் அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கான குறைந்த கேள்வி காரணமாக உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிட்டதொரு அதிகரிப்பு காணப்பட்டதுடன் 2020 ஏப்பிறலிலிருந்து யூன் காலப்பகுதியில் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2019ஆம் ஆண்டினைப் போல, உணவல்லா வகை மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டிலும் பெரும்பங்கினை வகிக்கின்ற துணைப் பிரிவுகளான வீடமைப்பில் வீட்டு வாடகை, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்களின் கட்டணங்களில் அதிகரிப்பொன்று 2020 சனவரியில் காணப்பட்டபோதிலும் ஒப்பீட்டளவில் குறைந்தளவில் இருந்தது. ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட இந்த அதிகரிப்பானதுடன் கல்வி துணைப் பிரிவில் இரண்டாம் நிலைக் கல்விக்கான வகுப்புக் கட்டணங்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டு, இது 2019 சனவரிக்குப் பின்னர் உணவல்லா வகையில் அவதானிக்கப்பட்ட உயர்ந்த அதிகரிப்பினை விளைவித்தது. மேலும், 2020 மாச்சில் சுகாதார துணைப்பிரிவில் சுகாதார ஆய்வுகூடங்களுக்கான கொடுப்பனவுகளில் அதிகரிப்பொன்று இடம்பெற்றது. எனினும், 2020 ஓகத்தில் அதே வீழ்ச்சியொன்று காணப்பட்டதுடன் முழு இரத்த எண்ணிக்கை ஆய்வுகூட சோதனையினுடைய கீழ்நோக்கிய விலைத்திருத்தம் பங்களித்திருந்தது. அதேவேளை, லங்கா இந்தியன் ஒயில் கம்பனி 2020 ஏப்பிறல் 06 இலிருந்து பெற்றோலின் (92 ஒக்ரேன்) விலையை லீற்றர் ஒவ்வொன்றிற்கும் ரூ.142 இலிருந்து ரூ.137 ஆக கீழ்நோக்கி திருத்தியமைத்தது. ஆனால் 2020 மே 17இல் மீண்டும் ஆரம்ப விலைக்கே அதிகரித்தது. எனினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்ட விலையுடன் இணங்கச் செய்வதற்கு லங்கா இந்தியன் ஒயில் கம்பனியானது மீண்டும் பெற்றோல்

(92 ஒக்ரேன்) விலையினை ரூ.137 ஆக 2020 மே 20 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் குறைத்தது. சாராயம், பியர் மற்றும் சிகரெட்டின் விலைகள் ஆண்டுகாலப்பகுதியில் மாற்றமடையாமல் காணப்பட்ட அதேவேளை பாக்கு மற்றும் வெற்றிலையின் விலைகள் 2020 ஓகத்து தொடக்கம் கணிசமானளவில் அதிகரித்தது. அதேவேளை, உணவல்லா பிரிவிலுள்ள பொருட்களின் விலைகள் 2020 யூலை தொடக்கம் அதிகரிக்கும் போக்கொன்றினைப் பின்பற்றின.


## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

- **2020 சனவரியில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 137.0 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்திருந்ததுடன் ஏப்பிறலில் 134.8 சுட்டெண் புள்ளிகளாக வீழ்ச்சியடைந்து 2020 செத்தெம்பரில் 138.9 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது. 2020 சனவரியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் காணப்பட்ட அதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும்.** அதன்பின்னர், உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் வீழ்ச்சியினால் 2020 மாச்சு மற்றும் ஏப்பிறலில் தொடர்ச்சியான இரண்டு மாதங்களுக்கு தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அதன் முன்னைய கீழ்நோக்கிய போக்கிலிருந்து மீண்டு அதன்பின்னர் 2020 யூன் வரை அதிகரித்த அதேவேளை இந்த அதிகரிக்கும் உத்வேகத்தினை

வரைபடம் 4.2

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத % மாற்றத்திற்கான பங்களிப்பு (2013 = 100)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

நோக்கி தனிப்பங்களிப்பாளராக உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகள் காணப்பட்டன. மேலும், 2020 ஓகத்து மற்றும் செத்தெம்பர் இரண்டிலும் தேசிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் காணப்பட்ட அதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தன. எனினும் உணவு வகையில் உள்ள பொருட்களின் விலைகளில் காணப்பட்ட வீழ்ச்சியானது உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பினால் இரத்துச் செய்யப்படும் வரை 2020 பெப்புருவரி மற்றும் யூலை இரண்டிலும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மாற்றமடையாமல் காணப்பட்டது.

### கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்

- **சனவரியில் 134.6 சுட்டெண் புள்ளிகளாக காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2020 மாச்சில் 133.4 சுட்டெண் புள்ளிகளை அடைந்து 2020 செப்தெம்பரில் 136.3 சுட்டெண் புள்ளிகளாக அதிகரித்தது.** உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலும் உள்ள பொருட்களின் விலைகளின் அசைவினால் ஆதரவளிக்கப்பட்டு 2020 சனவரியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அதிகரித்தது. அதேவேளை, உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவுகள் வீழ்ச்சிக்கு பங்களித்திருந்ததுடன் அதன்பின்னர் முறையே 2020 மார்ச் மற்றும் ஏப்பிறலில் அதிகரிப்பு காணப்பட்டது. 2020 யூலை மற்றும் 2020 செப்தெம்பர் வரை அடுத்த மூன்று தொடர்ச்சியான மாதங்களில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் வெளிப்படுத்தப்பட்ட மாதத்திற்கு மாத அதிகரிப்புக்கள் உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலும் உள்ள பொருட்களின் விலை அதிகரிப்புகளுக்கு முக்கிய காரணமாகின.

### முதன்மைப் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2020 முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நடு ஒற்றை இலக்கத்திற்கு மேலேயே காணப்பட்டது.** ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது சனவரியில் 7.6 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2020 பெப்புருவரியில் 8.1 சதவீதமாக உச்சநிலையை அடைந்து, 2017 நவம்பரிலிருந்து

உயர்வாக இருந்ததுடன் 2020 செத்தெம்பரில் 6.4 சதவீதத்தினை அடைந்தது. அதேவேளை, ஆண்டுச்சராசரி பணவீக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2020 சனவரியில் 4.1 சதவீதத்திலிருந்து 6.2 சதவீதமாக செத்தெம்பரில் தொடர்ச்சியாக அதிகரித்தது.

- **கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது 2020 இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில் 4 - 6 சதவீத எதிர்பார்க்கப்பட்ட எல்லைக்குள் பெரிதும் காணப்பட்டது.** அதற்கிணங்க, ஆண்டிற்கு ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கமானது 2020 சனவரியில் 5.7 சதவீதத்திலிருந்து பெப்புருவரிக்கு 6.2 சதவீதமாக அதிகரித்ததுடன் வீழ்ச்சியடையும் போக்கொன்றினை நோக்கி அசைவடைந்து அதன்பின்னர் யூனில் 3.9 சதவீதத்தினை அடைந்து அதன்பின்னர் 2020 செப்தெம்பரில் 4.0 சதவீதமாக அதிகரித்தது. அதேவேளை, ஆண்டுச்சராசரி கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கமானது 2020இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பெரிதும் நிலையானதாகக் காணப்பட்டதுடன் அது சனவரியில் 4.5 சதவீதமாகவும் 2020 செப்தெம்பரில் 4.7 சதவீதமாகவும் காணப்பட்டது.

## மையப் பணவீக்கம்


- **ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது நிலையான மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை கடந்த ஆண்டினைவிட குறிப்பிடத்தக்களவு குறைவானதாகவே**

வரைபடம் 4.3
மையப்பணவீக்கத்தின் அசைவுகள் - தே.நு.வி.சு. (2013=100)




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.4
உற்பத்தியாளர் விலை பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டுக்காண்டு %)




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**காணப்பட்டதுடன் இது 2019 இன் தொடக்கத்தில் காணப்பட்ட வீட்டு வாடகையில் குறிப்பிடத்தக்க உயர்வு காரணமாக கடந்த ஆண்டு முழுவதும் நிலவிய உயர் அடிப்படையின் புள்ளிவிபரத் தாக்கத்தினால் ஏற்பட்டது.** இருப்பினும், வீட்டு வாடகையில் மேல்நோக்கிய திருத்தமொன்று 2020 சனவரியில் நடைபெற்றபோதிலும், அதன் தாக்கமானது ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது. இதற்கேற்ப, மாதாந்த அதிகரிப்புக்களின் மத்தியில் ஆண்டிற்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மையப் பணவீக்கமானது சனவரியில் 3.9 சதவீதத்திலிருந்து மாச்சில் 3.2 சதவீதமாக வீழ்ச்சியடையும் போக்கொன்றினை நோக்கி அசைவடைந்ததுடன் எப்பிறலில் மாற்றமின்றிக் காணப்பட்டதுடன் 2020 செத்தெம்பரில் தொடர்ந்து அதிகரித்து 4.8 சதவீதத்தினை அடைந்தது. அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2020 சனவரியில் 3.0 சதவீதமாகவும் செப்தெம்பரில் 2.9 சதவீதமாகவும் காணப்பட்டது.

## உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம்


- **உற்பத்தியாளருடைய விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்ட உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (உ.வி.சு, 2013 கா4=100) 2020 சனவரியில் 5.6 சதவீதமாக தொடக்கத்தில் அதிகரித்ததுடன் யூலையில் 7.8 சதவீதமாக உச்சநிலையை அடைந்து ஓகத்தில் 7.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** வேளாண்மை, உற்பத்தி,

மின்வலு மற்றும் நீர்வழங்கல் ஆகிய அனைத்து மூன்று துணைத்துறைகளின் விலைப்பணவீக்கமானது ஆண்டின் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிப்புக்களை வெளிப்படுத்தியிருந்த போதும் இடையில் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் காணப்பட்டது.

### பணவீக்க எதிர்பார்ப்புக்கள்

- **நிறுவனத்துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பெருமளவிற்கு 4 - 6 சதவீதத்திற்கிடையில் அசைவடைந்ததெனினும் 2020 இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கலப்பான அசைவுகளை வெளிப்படுத்தியிருந்த அதேவேளையில் வீட்டுத் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் நிறுவனத்துறையினதை விட மேலதிகமாகக் காணப்பட்டது.** நிறுவனத்துறை மற்றும் வீட்டலகுத்துறை இரண்டினதும் குறுங்கால பணவீக்க் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் நீண்டகால பணவீக்க எதிர்பார்ப்புகளுக்கு மேலானதாகவே காணப்பட்டது. அதற்கிணங்க, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப்பரவலினை எதிர்த்து போராடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் உள்நாட்டு உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலிகளில் ஏற்பட்ட இடையூறுகள், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், உள்நாட்டு நாணயத்தின் பெறுமானத்தேய்வு, தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைப்பாடு மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இலகுபடுத்தலுடன் கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி என்பன அவர்களுடைய உயர் பணவீக்க எதிர்பார்ப்புகளுக்கு பிரதான காரணங்களாக வெளிப்பட்டன. அதேவேளை, மிதமான கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப்பரவலின் மத்தியிலும் பன்னாட்டு எண்ணெய் விலைகளின் வீழ்ச்சி, வீட்டுத்தோட்டத்தின் மேல்நோக்கிய அசைவு, உள்நாட்டு உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட தளர்வு மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இலகுபடுத்தலுடன் வழங்கல் சங்கிலிகளின் மீட்சி என்பவை நீண்டகாலத்தில் அவர்களுடைய குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புகளுக்கான காரணங்களாக பதிலளித்தவர்களால் மேற்கோள் காட்டப்பட்டது.

வரைபடம் 4.5
கம்பனித்துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள்




*மூலங்கள்*: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### கூலிகள்


- **பொதுத்துறை கூலி வீதச்சுட்டெண்ணினால் (2016=100) அளவிடப்பட்ட பொதுத்துறை ஊழியர்களின் பெயரளவுக்கூலியானது 2019 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் 11.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** இந்த அதிகரிப்பிற்கு 2019 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் ரூ 2,500 இனை புதிய ஓய்வூதியமற்ற மாதாந்த இடைக்கால கொடுப்பனவொன்றின் அறிமுகம் மற்றும் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சிறப்புக்கொடுப்பனவின் கடைசித் தொகுதி மற்றும் அரசதுறை ஊழியர்களுக்கிடையிலான அடிப்படைச் சம்பளத்தில் இடைக்காலக்கொடுப்பனவு என்பன காரணமாகின. இதற்கேற்ப, பொதுத்துறை ஊழியர்களின் உண்மைக்கூலிகள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இல் முதல் எட்டு மாதங்களில் 4.3 சதவீத்தினால் அதிகரித்தது.

- **கூலி நிர்ணயசபையினால் நிர்வகிக்கப்படும் ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச்சுட்டெண்ணினால் (1978 திசெம்பர்=100) அளவிடப்படுகின்ற முறைசார் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக்கூலிகள் 2019 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2020 இன் முதல் எட்டு மாதங்களில் 0.2 சதவீதத்தினால் சிறிதளவினால் அதிகரித்தது.** எனினும், முறைசார் தனியார் துறை ஊழியர்களின் உண்மைக்கூலிகள் கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன்

4

வரைபடம் 4.6

உண்மை கூலிவீதச் சுட்டெண்களின் ஆண்டுச் சராசரி மாற்றம்




*மூலங்கள்:* தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஒப்பிடுகையில் 2020 முதல் எட்டு மாதங்களில் 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் அடிப்படை நாளாந்தக் கூலியினை ரூ. 1,000 இற்கு அதிகரிக்கும் சாத்தயித்தை நிர்ணயிப்பது தொடர்பில் 2020 இல் பல்வேறு கலந்துரையாடல் சுற்றுக்கள் நடைபெற்றன.

- **முறைசாரா தனியார்துறை கூலி வீதச்சுட்டெண் (2012=100) இனால் அளவிடப்படுகின்ற முறைசாரா தனியார்துறை ஊழியர்களின் பெயரளவுக்கூலிகள் 2019 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 3.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** வேளாண்மை, கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய அனைத்துத் துணைத்துறைகளின் ஊழியர்களின் பெயரளவுக்கூலிகள் 2020 இன் முதல் எட்டு மாதங்களில் முறையே 4.1 சதவீதம், 21 சதவீதம் மற்றும் 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், முறைசாரா தனியார்துறையின் உண்மைக்கூலிகள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் எட்டுமாத காலப்பகுதியில் 2.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை

- **தொடர்ச்சியான கட்டமைப்பு சார்ந்த சிக்கல்களுக்கு மத்தியிலும் கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் எதிர்மறையான தாக்கங்கள் 2020 முதல் அரைப்பகுதியில் தொழிற்சந்தை குறிகாட்டிகளை மோசமடைவதற்கு வழிவகுத்தன.** தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி பொருளாதார ரீதியாக செயற்பாட்டிலுள்ள குடித்தொகையின் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான வீழ்ச்சிக்கு மத்தியில் பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத குடித்தொகையின் கணிசமான அதிகரிப்பினால் முன்னெடுக்கப்பட்டு தொழில்புரியும் வயதிலுள்ள சனத்தொகை முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2020 முதல் அரைப்பகுதியில் அதிகரித்தது. இதற்கேற்ப, தொழிற்படைக்கும் தொழில்புரியும் வயதிலுள்ள சனத்தொகைக்கும் இடையிலான விகிதமாக இருக்கின்ற தொழிற்படை பங்கேற்பு விகிதமானது 2019 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2020 இன் முதல் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. அதேபோல தொழில்புரியும் குடித்தொகையில் கணிசமானளவு வீழ்ச்சியொன்று காணப்பட்டது. தொழிற்படையில் தொழிலற்ற குடித்தொகையின் பங்காக இருக்கின்ற தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 2020 முதல் அரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. அண்மைய கடந்த காலங்களில் காணப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக பெண்கள், இளைஞர்கள் மற்றும் கல்வித்தகமை பெற்ற நபர்கள் மத்தியில் தொழிலற்றோர் விகிதமானது 2020 முதல் அரைப்பகுதியில் தொடர்ந்தும் உயர்ந்த மட்டங்களில் காணப்பட்டது.

### தொழிற்படை

- **பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையான[3] தொழிற்படையானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 8.603 மில்லியனிலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 8.470 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது 1.5 சதவீத வீழ்ச்சியொன்றினை பதிவு செய்திருந்தது.** தொழிற்படையின் இந்த வீழ்ச்சியானது குறித்த காலப்பகுதியில் பெண் தொழிற்படையில் 6.0 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால் மட்டுமே ஏற்பட்டதாகும். இதற்கு மாறாக தொழிற்படையில் உயர்ந்த பங்கினைக் கொண்ட ஆண் தொழிற்படையானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் 0.9 சதவீதத்தினால் அதிகரித்தது. துறை ரீதியான தொழிற்படையின்படி முக்கியமாக பெண் தொழிற்படையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாக குறித்த காலப்பகுதியில்

3 இது தற்போது பொருளாதார ரீதியாக செயற்பாட்டில் உள்ள குடித்தொகையாக இருக்கின்றது, அதாவது குறித்த ஒருவார காலப்பகுதியில் தொழில் புரியும் அல்லது தொழிலற்றவர்களாக இருக்கின்ற ஆட்களின் எண்ணிக்கை (15 வருடங்கள் மற்றும் அதற்குமேலே).

4

அட்டவணை 4.1
தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை

| விடயம் | 2019 | | 2020(அ) | |
|---|---|---|---|---|
| | முதலாம் அரையாண்டு | ஆண்டு | முதலாம் அரையாண்டு | ஆண்டு (எறிவுகள்) |
| வீட்டலகுகளின் குடித்தொகை, '000 (வயது 15 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும்) | 16,364 | 16,424 | 16,742 | 16,781 |
| தொழிற்படை, '000 | 8,603 | 8,592 | 8,470 | 8,540 |
| தொழிலிலுள்ளோர், '000 | 8,193 | 8,181 | 7,998 | 8,089 |
| தொழிலற்றோர், '000 | 410 | 411 | 471 | 451 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் (வீட்டலகுகளின் குடித்தொகையின் % ஆக) | 52.6 | 52.3 | 50.6 | 50.9 |
| தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் % ஆக) | 4.8 | 4.8 | 5.6 | 5.3 |

(அ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

நகர்ப்புறம், பெருந்தோட்டம் மற்றும் கிராமிய துறைகள் ஆகிய அனைத்து துறைகளுக்கிடையிலும் வீழ்ச்சி காணப்பட்டது. அதேவேளை நகர்ப்புற மற்றும் பெருந்தோட்ட துறைகளில் ஆண் தொழிற்படையானது ஓரளவு வீழ்ச்சியினை பதிவு செய்திருந்த போதிலும் கிராமியத் துறையில் ஆண் தொழிற்படை அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்திருந்தது.

4

- **தொழிற்படை வீழ்ச்சிக்கேற்ப, தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2019 முதல் அரைப்பகுதியில் பதிவு செய்திருந்த 52.6 சதவீதத்திலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 50.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** இந்த கணிசமான வீழ்ச்சியானது முக்கியமாக கரிசனைக்குரிய காலப்பகுதியில் பொருளாதாரத்தில் செயற்பாட்டிலில்லாத பெண்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பால் தூண்டப்பட்டதாகும். இதன் விளைவாக பெண் தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2019 இன் தொடர்புடைய காலப்பகுதியில் 34.7 இலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 32.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. ஆண் தொழிற்படைப் பங்கேற்பு விகிதமானது பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள ஆண்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலில்லாத ஆண்களின் உயர்ந்த அதிகரிப்பு காரணமாக 2019 இன் முதல் அரைப்பகுதியில் காணப்பட்ட 73.4 சதவீதத்திலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 72.1 ஆக வீழ்ச்சியடைந்தது. அதற்கிணங்க, நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் தாழ்ந்த பெண் தொழிற்படை பங்கேற்பு தொடர்பான தொடர்ச்சியான பிரச்சனைகளை உறுதிப்படுத்தும் வகையில் தொழிற்படை பங்கேற்பு விகிதத்தில் பாலின இடைவெளியானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 38.7 சதவீதப்புள்ளிகளிலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 40.1 சதவீதப்புள்ளிகளாக உயர்வடைந்தது.

## தொழில்நிலை

- **தொழில் புரியும் குடித்தொகையானது[4] 2019 இன் தொடர்புடைய காலப்பகுதியில் காணப்பட்ட 8.193 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் 7.998 மில்லியனாக 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இந்த வீழ்ச்சியானது கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளினால் முன்னெடுக்கப்பட்டதுடன் வேளாண்மைத் துறையில் தொழில்புரியும் குடித்தொகையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. கைத்தொழில் துறைக்குள் சுரங்கம் அகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கம், மின்வலு, எரிவாயு, நீராவி மற்றும் வளி பதப்படுத்தி வழங்கல், நீர்வழங்கல், கழிவுநீர் அகற்றல், கழிவு முகாமைத்துவம் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை உள்ளடக்கிய அனைத்துத் துணைத்துறைகளுக்கிடையில் தொழில்புரியும் சனத்தொகையில் வீழ்ச்சியொன்று காணப்பட்ட அதேவேளை பணித்துறைக்குள் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம், மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் வண்டிகளை திருத்துதல், நிர்வாக மற்றும் ஆதரவுப் பணிச்செயற்பாடுகள், பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப்பாதுகாப்பு துணைத்துறைகளில் தொழில்புரியும் குடித்தொகையில் ஓர் கவனத்திற்குரிய வீழ்ச்சி காணப்பட்டது. கைத்தொழில் மற்றும் பணிகள் துறைத் தொழில்நிலையின் இந்த வீழ்ச்சியானது 2020 இன் முதல் அரைப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட உற்பத்தி மற்றும் பணிகள் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் அளவீடுகளின் தொழில்நிலைச் சுட்டெண்களில் பிரதிபலித்தன.

4 கரிசனைக்குரிய காலப்பகுதியில் குறைந்தது ஒரு மணித்தியாலமேனும் வேலை செய்கின்ற ஆட்கள் அதாவது ஊதியம் பெறும் ஊழியர்கள், தொழில்தருனர்கள், சொந்த தொழில் புரிவோர் அல்லது குடும்பத்தொழில் புரிவோர், தொழிலுள்ளோர் ஆவார். கரிசனைக்குரிய காலப்பகுதியில் தொழில் ஒன்று இருந்து ஆனால் வேலைக்குச் செல்லாதவர்கள் உள்ளடக்கப்படுகிறார்கள்.

அதேவேளை, அண்மைய கடந்த காலங்களில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, மொத்த தொழில்நிலையில் 46.2 சதவீதத்தினைக் கொண்ட பணிகள் துறையானது முன்னணித் தொழில்நிலை இயக்கியாக காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகள் மொத்த தொழில்நிலையில் முறையே 27.0 சதவீதம் மற்றும் 26.8 சதவீதமாகப் பங்களித்திருந்தன.

- **தொழில்நிலை நிலைமையின்படி, அனைத்து வகை தொழில்புரியும் குடித்தொகை 2019 இன் அரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** தொழில்நிலை நிலைமை தொடர்பாக, தொழில்புரியும் குடித்தொகையானது கூலி மற்றும் சம்பளத்தொழிலாளர் மற்றும் சுயதொழில் புரிவோர் என பிரதான இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஊழியர் வகையானது மேலும் பொதுத்துறை மற்றும் தனியார்துறை என வகைப்படுத்தப்படும் அதேவேளை சுயதொழில் புரிவோர் வகையானது தொழில் தருனர்கள், சொந்த தொழில் வழங்குவோர் மற்றும் பங்களிக்கும் குடும்பத்தொழிலாளர்கள் என வகைப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய வகைகளுக்குள் பொதுத்துறை ஊழியர்களைப் பின்பற்றி தனியார்துறை ஊழியர்களில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சி காணப்பட்டது. அதற்கு மாறாக, வறுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் இலங்கையில் தாழ்ந்த வருமான மட்டப்பகுதியினரில் ஒரு இலட்சம் நபர்களுக்கும் 60,000 வேலையற்ற பட்டதாரிகளுக்காக தொழில்களை வழங்குவதற்கான அரசின் நிகழ்ச்சித்திட்டத்துடன் சனாதிபதியின் ‘சௌபாக்கியா தெக்ம’ கொள்கைக்கூற்றின்படி பொதுத்தறை தொழிலானது ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## தொழிலின்மை

- **தொழில்புரியும் குடித்தொகையின் வீழ்ச்சிக்கேற்ப, தொழிலற்றோர் குடித்தொகையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் எதிர்மறையான தாக்கங்கள் காரணமாக முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.410 மில்லியனிலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 0.471 மில்லியனாக 14.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தது.** தொழிலற்றோர் குடித்தொகையின் இந்த அதிகரிப்பானது முக்கியமாக தொழிலற்றோர் குடித்தொகையின் மொத்த அதிகரிப்பில் தொழிலற்ற பெண்கள் 58 சதவீதமாக பங்களித்தது. அதற்கிணங்க, தொழிலற்ற பெண்களின் அதிகரிப்பானது 16.0 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை, கரிசனைக்குரிய காலப்பகுதியில் தொழிலற்ற பெண்களின் அதிகரிப்பானது 13.4 சதவீதத்தினைப் பதிவுசெய்திருந்தது.

அட்டவணை 4.2

தொழிலின்மை வீதம் (%) - 2020 முதலரை (அ)

| | |
|---|---|
| **வயது (ஆண்டுகள்) அடிப்படையில்** | |
| 15-19 | 31.0 |
| 20-24 | 26.3 |
| 25-29 | 11.3 |
| 30-39 | 3.2 |
| 40+ | 1.2 |
| **கல்வி மட்ட அடிப்படையில்** | |
| ஆண்டு 6-10 | 4.0 |
| க.பொ.த (ச/த) | 7.0 |
| க.பொ.த (உ/த) மற்றும் அதற்குமேல் | 10.1 |

(அ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

- **தொழிலற்ற குடித்தொகையின்[5] அதிகரிப்பிற்கேற்ப, தொழிலற்றோர் விகிதமானது 2019 இன் முதல் அரைப்பகுதியில் பதிவுசெய்திருந்த 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் 5.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.** அதற்கிணங்க, பெண்களின் தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 7.2 சதவீதத்திலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 8.9 சதவீதமாகக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. ஆண்களின் தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 3.4 சதவீதத்திலிலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 3.9 சதவீதமாக அதிகரித்தது.

- **அனைத்து வயது பிரிவினர்களிலும், தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியிலும் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் அதிகரித்தது.** அத்தகைய வயது வகைகளுக்குள் இளைஞர் (15-24 வயது) தொழிலின்மையானது உயர்மட்டத்தில் மாறாமல் தொடர்ந்து காணப்பட்டதோடு முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 20.8 சதவீதத்திலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 27.3 சதவீதத்திற்கு

5 தொதில்புரிவதற்கு தயாராக உள்ள அல்லது தேடும் ஆட்கள் மற்றும் வேலை செய்யாவிடிலும் கடந்த நான்கு வாரப்பகுதியில் தொழில் ஒன்றைத் தேடுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்ட மற்றும் அடுத்த இரண்டு வாரங்களுக்கிடையில் வேலைவாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பவர் என்பன தொழிலின்மை எனக் கூறப்படுகிறது.

4

வரைபடம் 4.7

திரண்ட தொழிலின்மை வீதம்




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கணிசமாக அதிகரித்தது. மேலும், தொழிலற்றோர் குடித்தொகையின் மொத்த அதிகரிப்பின் 98 சதவீதத்திற்கு தொழிலற்ற இளைஞர்கள் பங்களித்தன. இளைஞர் தொழிற்படையில் கால்வாசிக்கும் அதிகமானோர் தொழிலற்று இருப்பதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் மிகுந்த ஆற்றல் மிக்க மனிதவளத்தின் தளத்தின் குறைப்பயன்பாடு தொடர்பான சிக்கலகளை எடுத்துக்காட்டுகிறன.

4


- **கல்விமட்டத்தின்படி தொழிலற்றோர் விகிதமானது அனைத்து கல்வி பிரிவினர்களுக்கு மத்தியில் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இன் முதல் அரைப்பகுதியில் அதிகரித்தது.** அதிகூடிய தொழிலின்மை விகிதமானது க.பொ.த உயர்தரம் மற்றும் அதற்கு மேலான கல்வித் தகமைப் பிரிவில் காணப்படுகிறது. அதற்கிணங்க, இந்த பிரிவில் தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் 8.7 சதவீதத்திலிருந்து 2020 இன் முதல் அரைப்பகுதியில் 10.1 சதவீதமாக கணிசமானளவு அதிகரித்தது. மேலும் க.பொ.த உயர்தரம் மற்றும் அதற்கு மேல் கல்வித் தகமை பிரிவானது கரிசனைக்குரிய காலப்பகுதியில் தொழிலற்றோர் குடித்தொகையின் மொத்த அதிகரிப்பின் 40 சதவீதத்திற்கு பங்களித்திருந்தது. கல்வித் தகமை பெற்றவர்களுக்கிடையில் இந்த உயர் தொழிலின்மையானது நாட்டின் கல்வி முறைமையிலுள்ள இடைவெளிகளினால் ஏற்படும் கேள்வி மற்றும் நிரம்பல் பொருத்தமின்மைகளை பிரதிபலிக்கிறது. அதேவேளை 2020 முதல் அரைப்பகுதியில் தரம் 6 - 10 பிரிவினரில் தொழிலற்றோர் விகிதமானது, முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவுசெய்திருந்த 3.0 சதவீதத்திலிருந்து 4.0 சதவீதமாக அதிகரித்த அதேவேளை க.பொ.சாதாரண தர பிரிவில் தொழிலற்றோர் விகிதமானது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவுசெய்திருந்த 6.3 சதவீதத்திலிருந்து 7.0 சதவீதமாக அதிகரித்தது. ஆயினும், கல்வியில் அனைத்து மட்டங்களிலும் உள்ள பெண்களின் தொழிலின்மை விகிதங்கள் என்பது சகல கல்வி மட்டங்களில் அவர்களின் ஆண் ஒத்தானவர்களை விட உயர்ந்தவை என்றாலும், இது க.பொ.த உயர்தர மற்றும் அதற்கு மேற்பட்ட பிரிவில் படித்த பெண்களிடையே தொழில் கிடைக்குந்தன்மை தொடர்பிலான பிரச்சினைகளை பிரதிபலிக்கின்றது.

## வெளிநாட்டு தொழில்வாய்ப்பு

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்கின்ற நாடுகளில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளுடன் மற்றும் இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தற்காலிகத் தடை விதித்ததுடன் 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் 95,007 இலிருந்து 2020இன் முதலரைப்பகுதியில் 40,689 ஆக 57.2 சதவீதத்தால் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான வெளிச்செல்லுகைகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.** அதற்கிணங்க, 2020இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான மொத்த வெளிச்செல்லுகைகளில் ஆண்களின்

வரைபடம் 4.8

தேர்ச்சி அடிப்படையில் வெளிநாட்டுத் தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள் (ஆண்டின் முதலரை)




மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிச்செல்லுகைகள் 60 சதவீதமாகவும் பெண்களின் வெளிச்செல்லுகைகள் 40 சதவீதமாகவும் காணப்பட்டது. ஆண் மற்றும் பெண் வெளிச்செல்லுகைகள் இரண்டும் 2019இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் முறையே 56.6 சதவீதமாகவும் 58.0 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான மொத்த வெளிச்செல்லுகைகளின் வீழச்சிற்கேற்ப, தொழில்சார், நடுமட்டம், எழுதுநர் மற்றும் அது தொடர்பானவை, தேர்ச்சியுடைய, பகுதித் தேர்ச்சியுடைய மற்றும் தேர்ச்சியற்ற வீட்டுப்பணிப்பெண்கள் என்ற சகல தேர்ச்சிப் பிரிவுகளிற்குக் கீழான வெளிச்செல்லுகைகள் சென்ற ஆண்டின் முதலரைக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் அதே காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப் பணிப் பெண் வகையினர் 2020இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான மொத்த வெளிச்செல்லுகைகளில் பெருமளவான 56 சதவீதமான பெரும்பான்மையைப் பிரதிபலித்தன. அதற்கிணங்க, தேர்ச்சியற்ற மற்றும் பணிப்பெண் வகையினரின் கீழ் வெளிச்செல்லுகைகள் 2020இன் முதலரைப்பகுதியில் முறையே 10,686 மற்றும் 12,163 ஆகக் காணப்பட்டது.

- **கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள குழுக்களுக்கிடையில் உள்ளனர்.** இந்த உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மாச்சு மாதத் தொடக்கத்தில் முக்கியமாக இத்தாலி, தென்கொரியா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்குத் திரும்பினர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி, உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சுகாதார இடர்கள், ஒப்பந்தங்கள் காலாவதியாகியமை மற்றும் தொழில் இழப்புக்கள் மற்றும் பொருளாதாரப் பின்னடைவின் விளைவாக ஊதியம் வழங்கப்படாமைக்கு மத்தியிலும் பயணிகளின் வருகை இடைநிறுத்தப்பட்டதிலிருந்து தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளின் கணிசமானளவு எண்ணிக்கையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பியிருந்தனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி, கிட்டத்தட்ட 39,489 புலம்பெயர் தொழிலாளர்கள் 2020 ஓகத்தில் அவர்களுடைய தொழில்களை இழந்ததுடன் ஏனைய பலர் அவர்களுடைய வருமானத்தில் வீழ்ச்சியை எதிர்கொண்டனர். அதேவேளை, கிட்டத்தட்ட 2,600 புலம்பெயர் தொழிலாளர்கள் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்டிருந்த அதேவேளை 2020இன் ஒத்தோபர் தொடக்கத்தில் 64 இறப்புக்கள் ஏற்பட்டன. இந்தக் குறிப்பின் படி, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான கேள்வி குறைவடைந்தமை காரணமாக வேலை இழப்புக்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் வருவாய்களில் வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டு தொழில் நிலைக்கான வெளிச்செல்லுகைகளின் வீழ்ச்சியானது ஆண்டுகாலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் உள்நாட்டு தொழிலாளர் சந்தையில் தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தக்கூடும்.

- **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது 2020இன் முதலரைப் பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றின் விளைவுகளை தீர்ப்பதற்கான சிறப்பு முன்னெடுப்புக்களுக்கு மேலதிகமாக புலம்பெயர் வழிமுறையின் ஒழுங்குபடுத்தல், புலம்பெயர்ந்தவர்களும் அவர்களுடைய குடும்பங்களை பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்குமான வழிமுறைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.** இதற்கேற்ப, 2020இன் முதலரைப் பகுதியில் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நம்பகத்தன்மையுடைய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை உறுதிசெய்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் தொடர்பில் 146 திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டதுடன் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட உரிமமற்ற நபர்கள் மற்றும் சட்டத்தை மீறின உரிமம்பெற்ற முகவர்களுக்கெதிராக 58 நீதிமன்ற வழக்குகளை பதிவுசெய்தன. நலன்புரி மற்றும் பாதுகாப்பு வழிமுறையாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது 40,143 புலம்பெயர் தொழிலாளர்கள் சார்பாக காப்புறுதிக் கட்டுப்பணமாக ரூ.26.33 மில்லியனைச் செலுத்தியிருந்ததுடன் அவர்களைத் தங்கிவாழ்வோருக்கு தாய் நாட்டிற்கு திருப்பியனுப்புதல், இறப்புக் கோரிக்கைகள் மற்றும் மருத்துவக் கோரிக்கைகள் தொடர்பான காப்புறுதித் திட்டத்தின் கீழ் நன்மைகளாக 888 ஆட்களுக்கு ரூ.54.86 மில்லியனை செலுத்தியிருந்தது. மேலும், புலம்பெயர் தொழிலாளர்களின் 797 குழந்தைகளுக்கு

4

புலமைப் பரிசில் வழங்குவதற்காக ரூ.20.25 மில்லியனை செலவுசெய்தது. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் தொழிலாளர் நலன்புரி நிதியத்தினை பயன்படுத்தி 38 தேவைப்படும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நிதியியல் உதவியினை வழங்கியிருந்ததுடன் மொத்தமாக 15 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அவர்கள் வெளிநாட்டில் தங்கியிருந்த போது எதிர்கொண்ட பிரச்சனைகள் காரணமாக தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து ரூ.0.22 மில்லியனையும் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூ.0.48 மில்லியனையும் பயன்படுத்தி தாய்நாட்டிற்கு திருப்பி அழைத்து வந்திருந்தார்கள். அதேவேளை, உள்நாட்டுத் தொழிலாளர்களின் தரத்தினை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கில், 2020இன் முதலரைப்பகுதியில் 1,293 தொழில்தேடுபவர்களுக்கு தேசிய தொழில் முறைத்தகமை மட்டம் ஐஐஐ தகுதியினை வழங்கியிருந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட விசேட முயற்சிகளாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களிடமிருந்து வழமையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு விசேட தகவல் நிலையமொன்றினை நிறுவியதுடன் வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களினூடாக புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுடன் தகவல்கள் மற்றும் அரச அறிவுறுத்தல்களைப் பகிர்ந்துகொண்டன. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கும் சிகிச்சை பெறுவதற்கும், சுயதனிமைப்படுத்தலிற்கு உட்படுத்துவதற்கும், அவர்களுடைய தொழில் இழப்பிற்கும் உணவு அல்லது அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கும் தேவையான நிதியிடலை வழங்குகின்ற இலங்கை இராஜதந்திரப் பணிகளுக்காக நிதியினை ஒதுக்கியிருந்தது. அதற்கு மேலதிகமாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அவர்களுடைய வாழ்க்கையினை இழந்த புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு நிதியியல் உதவியினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## தொழில் உறவுகள்

- **தனியார் துறையில் காணப்படுகின்ற தொழில் உறவுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் வேலை நிறுத்தங்கள், வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் காரணமாக இழந்த மனித நாட்கள் என்பவற்றின் எண்ணிக்கையின் நியதிகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி மூலம் மேம்பட்டிருந்தது.** தொழில் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2020இன் முதலரைப்பகுதியில் மொத்தமாக 15 வேலைநிறுத்தங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன, இவற்றில் 8 வேலைநிறுத்தங்கள் பெருந்தோட்டத் துறையில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் ஏனைய தனியார் நிறுவனங்களில் 7 வேலை நிறுத்தங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. ஒட்டுமொத்தமாக 2,167 தொழிலாளர்கள் 2020இன் முதலரைப்பகுதியில் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் ஏறத்தாழ 50 சதவீதமானோர் முறையே பெருந்தோட்டத் துறையினையும் ஏனைய தனியார் நிறுவனங்களையும் சார்ந்தவர்களாகும். வேலைநிறுத்தங்கள் காரணமாக இழந்த மொத்த மனிதநாட்கள் 2020இன் முதலரைப்பகுதியில் 5,391 ஆகக் காணப்பட்டது. இதில், 67 சதவீதமானவை பெருந்தோட்டத்துறையிலும் 33 சதவீதமானவை ஏனைய தனியார் நிறுவனங்களிலும் இடம்பெற்றன. பெருந்தோட்டத் துறையில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகரித்தன. எனினும், முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதலரைப்பகுதியில் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட பணியாளர்களும் வேலை நிறுத்தங்கள் காரணமாக இழந்த மனிதநாட்களும் வீழ்ச்சியடைந்தன. இதற்கு முடக்கல் மற்றும் இடைவெளிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை காரணமாக இருந்திருக்கக்கூடும். ஏனைய தனியார் நிறுவனங்களில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை வீழச்சியடைந்தது. மேலும், ஏனைய தனியார் நிறுவனங்களில் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வேலைநிறுத்தங்கள் காரணமாக இழந்த மனிதநாட்களின் எண்ணிக்கையும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 முதலரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

- **தொழில்துறைசார் ஐக்கியத்தினை மேம்படுத்துவதற்காக திறன் அபிவிருத்தி, தொழில் மற்றும் தொழில் உறவுகள்[6] அமைச்சின் மூலம் 2020 முதலரைப்பகுதியில் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** அதற்கமைய, இக்கட்டான காலகட்டத்தின் போது தொழில்துறைசார் சமாதனத்தினைப் பேணும்பொருட்டு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து ஏற்பட்ட தொழில் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அமைச்சு மட்ட செயலணியொன்று நியமிக்கப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த நிறுவனங்களின் ஊழியர்களைத் தக்கவைத்தல், அனைத்து ஊழியர்களும் பணிக்கு அழைக்கப்பட முடியாதிருந்த நிறுவனங்களில் அனைத்து ஊழியர்களும் விகிதாசார அடிப்படையில் மாதாந்த பணி வழங்கப்பட்டிருந்தது என்பதனை உறுதி செய்வதற்கு பணி மாற்று முறைமையொன்றினை அல்லது ஏதேனும் வேறு பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்தல் மற்றும் 2020 மே, யூன், யூலை, ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களின் போது குறித்தொதுக்கப்படுவதற்கு போதிய பணி காணப்படாமையினால் ஊழியர்கள் வீட்டில் தங்கியிருப்பதற்கு வேண்டப்பட்டிருக்குமிடத்து இறுதியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முழுச் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அடிப்படைச் சம்பளத்தின் 50 சதவீதத்தினை அல்லது ரூ.14,500 இனைக் கொடுப்பனவில் எது ஊழியருக்கு மிகவும் சாதகமாகவிருக்குமோ அதன் மீது கருத்தொருமிப்பு அடையப்பெற்றது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரவலின் காரணமாக தொழில் முடிவுறுத்தல் பற்றிய முறைப்பாடுகளை வினைத்திறன் மிக்கவாறும் செயல்திறன் மிக்கவாறும் பெற்றுக்கொள்வதற்கும் தீர்த்து வைப்பதற்கும் பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டதுடன் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களைக் கொடுப்பனவு செய்வதற்கு ஏதேனும் மேலதிக் கட்டணங்களை அல்லது தாமதக் கட்டணங்களை அறவிடாது ஆறுமாத கால நீடிப்பு தொழில்தருநர்களுக்கு வழங்கப்பட்டது. அதேவேளை, இரவு மாற்றுக் கடமைகளில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குதலானது சீரமைக்கப்பட்டதுடன் இரவுப் பணி அனுமதி முறையினை மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் நெகிழ்வுமிக்கதாகவும் ஆக்குவதற்கு தொழில் திணைக்களத்திற்கு தமது இரவுப் பணிக் கோரிக்கைகளை இணையமூடாகச் சமர்ப்பிப்பதற்கு தொழில்தருநர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. மேலும், 2020 முதலரைப்பகுதியில் தொழில் உறவுகள் துறைக்கு பல சட்டரிதியான ஏற்பாடுகளும்.˙. திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கமைய, தனியார் துறையின் குறைந்தபட்ச சம்பளத்தினை ரூ.10,000 இலிருந்து ரூ.12,000 இற்கு அதிகரிப்பதற்கு 2020 பெப்புருவரியில் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புகளை தவிர்ப்பதனைத் தடுப்பதற்கும் பணியார்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலனோம்புகளைப் பாதுகாப்பதற்கும் புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்கள் தொடர்பில் தகவல்களை தொழில் திணைக்களத்திற்கு இரண்டு மாதங்களினுள் அறிக்கையிடுவதற்கு தொழில்தருநர்களை கட்டாயப்படுத்துகின்ற விதத்தில் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சகாய நிதிச் சட்டத்தினைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டத்தின் கீழ் 18 வயதிற்குக் குறைந்த இளம் ஆட்களுக்கான ஆபத்தான தொழில்கள் மீதான வரைவு ஒழுங்குவிதிகள் அத்துடன் தொழிலுக்கான குறைந்தபட்ச வயதினை 14 வருடங்களிலிருந்து 16 வருடங்களுக்கு அதிகரிப்பதற்கான வரைவு திருத்தச் சட்டங்கள் அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.

6 அமைச்சின் பெயர் 2020 ஓகத்து 09 திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் தொழில் அமைச்சு என மாற்றம் செய்யப்பட்டது.

## தொழில் உற்பத்தித்திறன்

- **வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி (2010 விலைகளில்) நியதிகளில் அளவிடப்படுகின்ற தொழில் உற்பத்தித்திறனானது 2019இன் தொடர்பான காலப்பகுதியின் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.491.06 உடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் காலாண்டில் வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.564.77 இனை அடைந்து 15 சதவீதத்தினால் அதிகரித்தது.** முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த தொழில் உற்பத்தித்திறனின் அதிகரிப்பிற்கு வேலைசெய்யப்பட்ட மணித்தியாலங்களில் அவதானிக்கப்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக அமைந்தது. இதற்கு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலை முறியடிப்பதற்கான கட்டுப்பாட்டு வழிமுறைகள் மூலம் 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து நிலவிய பணி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

4

கைத்தொழில் மற்றும் பணிகள் துறையில் 2019இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் காலாண்டில் தொழில் உற்பத்தித்திறனில் சாதகமான வளர்ச்சியொன்றினை அறிக்கையிட்ட அதேவேளை வேளாண்மைத் துறையின் தொழில் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தது. தொழில் உற்பத்தித்திறன் மட்டம் என்ற நியதிகளில் பணிகள் துறையானது வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.701.04 கொண்ட மிக உயர்வான தொழில் உற்பத்தித்திறனை பதிவுசெய்து தொழில் வளங்களில் அதிக வினைத்திறன் பயன்பாட்டினை எடுத்துக்காட்டி அதனைத்தொடர்ந்து வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.655.77 கொண்ட தொழில் உற்பத்தித்திறன் மட்டமொன்றுடன் கைத்தொழில் துறை காணப்பட்டது. கடந்த அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான போக்குடன் வேளாண்மைத் துறையானது 2020இன் முதல் காலாண்டுப்பகுதியில் வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.168.99 கொண்ட ஆகக்குறைந்த தொழில் உற்பத்தித்திறனைப் பதிவுசெய்தது.

4

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

### விலைகள்

- **2020இன் எஞ்சிய காலப்பகுதியில் பணவீக்கமானது 4-6 சதவீதம் கொண்ட இலக்கு வீச்சினுள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நன்கு நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் சாதகமான உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள் பணவீக்கத்தினை தீங்கற்ற மட்டங்களில் கட்டுப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும். இருப்பினும் ஆண்டின் பிற்பகுதியில் எதிர்பார்க்கப்படும் பருவகால பெரும் மழை என்பது தளம்பலுடைய உணவுப் பொருட்களில் நிரம்பல் சார்ந்த குழப்பங்களை ஏற்படுத்தலாம். இது குறிப்பாக மரக்கறிகள், பழங்கள் மற்றும் உடன் மீன் என்பவையில் காணப்பட்டு உணவுப் பணவீக்கத்தில் ஓர் தற்காலிகமான அதிகரிப்பினை விளைவிக்கலாம். மேலும், பன்னாட்டு உணவு விலைகளின் வீழ்ச்சியடையும் போக்கின் சாத்தியமான திரும்பல் என்பதுடன் உள்நாட்டு நாணயம் மேலும் பலவீனமடைந்தால் இறக்குமதிப் பொருட்கள் மீது ஓர் விலை அழுத்தம் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இவ்வகையிலான அபிவிருத்திகளுக்கு மத்தியில், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தாக்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால், இறக்குமதிப் பொருட்களின் விலை அசைவுகளிலிருந்து எழும் பணவீக்க அழுத்துங்கள் மேலும் குறிப்பிடத்தக்கனவாக இருக்கும்.

- **உணவு விலை உறுதிப்பாடானது, வலுவான வழங்கல் முகாமைத்துவ முறைமையொன்றிற்கான கட்டாயப்படுத்துகின்ற தேவையினை எடுத்துக்காட்டி வழங்கல் பக்க த்தளம்பல்கள் மூலம் தொடர்ந்தும் சவாலுக்குள்ளாக்கப்படுகிறது.** விளைச்சல் உற்பத்தியில் இடம்பெறுகின்ற மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளை எதிர்வுகூறுவதற்கும் ஒவ்வொரு விளைச்சலினதும் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறையான மட்டத்திற்கமைவாக பயிர்களை உற்பத்தி செய்வதற்கும் முறையான பொறிமுறையொன்று தாபிக்கப்பவேண்டிய தேவை காணப்படுகின்றது. அதற்கமைய, இனங்காணப்பட்ட பற்றாக்குறையான பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கம் ஊக்கமளித்து மிகையான பயிர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு தலையீடுகளை மேற்கொள்ளலாம். மேலும், வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள் அல்லது தனியார் துறை வர்த்தகர்கள் போன்ற தேவையுடைய நிறுவனங்களுக்கு மிகையான வழங்கலை போட்டி விலையில் விற்பனை செய்வதற்கு முறையான பொறிமுறையொன்றினை ஒன்றிணைத்து மிகையான வழங்கலை களஞ்சியப்படுத்துவதற்கு முறையான களஞ்சிய வசதியொன்று அரசாங்கத்தினால் நிறுவப்பட வேண்டும். வேளாண்மைத் துறையானது பொருளாதாரத்தில் ஆகக்குறைந்த தொழில் உற்பத்தித்திறனை எடுத்துக்காட்டகின்றது. இது உற்பத்திச் செலவினை அதிகரித்து இதன்மூலம் அதன் விலைகளையும் அதிகரிக்கின்றது. எனவே, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரம்பல் மூலம் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அமைந்துள்ள வாய்ப்புகளிலிருந்து நலன்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உற்பத்திச் செலவினைக் குறைக்கின்ற அதேவேளை வெளியீட்டினை அதிகரிப்பதற்கு இத்துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு முறையான பொறிமுறைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

### தொழிற்படை மற்றும் தொழில்நிலை

- **புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்துவற்கான, முக்கியமாக மத்திய கிழக்கு நாடுகளில், முன்மொழிவுகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் புலம்பெயர் தொழில் வாய்ப்புக்களுக்கான**

**கேள்வியில் சுருக்கமடைதலானது வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான புதிய வழிகளை நாட வேண்டிய தேவையினை தோற்றுவித்துள்ளது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரம்பலின் தாக்கமாக இலங்கையின் புலம்பெயர் தொழிலாளிகளுக்கு தொழில் வழங்கும் பாரிய நாடுகளின் மசகெண்ணெய் விலைகளில் சரிவினை மசகெண்ணெயிற்கான மட்டுப்படுத்தப்பட்ட உலகளாவிய கேள்வி விளைவிப்பதால் தொழில் இழப்புகள் மற்றும் கொடுப்பனவுக் குறைப்புக்களுக்கு மத்தியில் அந்நாடுகளில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளினால் வெளிநாட்டுத் தொழில்நிலையானது கணிசமான அச்சுறுத்தலுக்குள்ளாகி நாட்டின் தொழிலாளர் பணவனுப்பல்களைப் பாதிக்கின்றது. புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாட்டுத் தொழில்சந்தையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வகையினுள் காணப்படுவதனால் இப்போக்கு தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் தொழில்களை இழந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு தற்காலிக வாழ்வாதாரங்களை வழங்குவது குறுகிய காலத்தில் அவசியமானதாகும். நீண்டகாலப் போக்கில் தொழிற்படைக்குச் சேர்க்கப்பட்டுள்ள நாட்டிற்குத் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்கள் தேவைப்படின் அவர்களின் தேர்ச்சி உயர்த்தப்பட்டு அல்லது அவர்களுக்கு மீள்தேர்ச்சி அளிக்கப்படுவதன் மூலம் ஒன்றில் வெளிநாட்டு சேரிடங்கள் இல்லாவிடில் உள்நாட்டுச் சூழலில் மீள் தொழிலுக்கமர்த்தப்பட வேண்டிய அதேவேளை பன்னாட்டுத் தொழில் சந்தையில் எதிர்கால இடர்களை எதிர்கொள்வதற்கு பொருத்தமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறுவப்பட வேண்டும். மேலும், உலகளாவிய தொற்றுநோய்க் காலப்பகுதியின் போது வெளிச்செல்லுகைகள் நிறுத்தப்பட்டமையின் காரணமாக தவறவிடப்பட்ட வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை மீளப்பெறுவதற்கு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான புதிய சேரிவிடங்கள் தொடர்ச்சியாக கண்டறியப்படவேண்டிய அதேவேளை நாட்டிற்கு பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை மீளப்பெற்று நிலைநிறுத்தும் பொருட்டு தேர்ச்சிபெற்ற மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்தல் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

- **உலகளாவிய நோய்த்தொற்று அதேபோன்று தொழிலாளர்களை ஈடுபடுத்துகின்ற கம்பனிக் கட்டமைப்புக்கள் மற்றும் முறைகள் என்ற நியதிகளில் உலகில் தீவிர மாற்றங்கள் போன்ற நிலைமைகளுக்கு ஏற்பாடு செய்யும் விதத்தில் இலங்கையில் தற்போது காணப்படுகின்ற தொழில் சட்டங்கள் மீளத்திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.** பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதில் கொவிட்-19 உலகளாவிய நோயத்தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சுகாதாரக் கரிசனைகள் மற்றும் தொடர்புடைய கட்டுப்பாடுகளின் காரணமாக இடையூறுகளுக்குள்ளான தொழில் நடவடிக்கைகள் மூலம் தோன்றிய சம்பளக் கொடுப்பனவு, தொழில் முடிவுறுத்தல் போன்றன தொடர்பிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தொழில் சட்டங்கள் இல்லாத நிலையில் இலங்கை தொழில்தருநர் சம்மேளனம், தொழிற்சங்கங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு என்பன வேறுபட்ட மட்டங்களின் பணிக்கமர்த்தப்பட்டவர்களுக்கான கூலிகளின் விகிதாசாரப்படுத்தலுக்கு முத்தரப்பு உடன்படிக்கையொன்றுக்கு இணங்கின. முன்னோக்கிச் சென்று இத்தீர்மானங்களும் அத்தகைய கட்டுப்பாட்டைத் தாண்டிய நிலைமைகளில் தொழில்தருநர்களுக்கு நிவாரண வழிமுறைகளை வழங்குகின்ற அதேவேளை, தொழிலின்மை நலன்களுடன் கூடிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வேறு தேர்ச்சி அளித்தல் அல்லது தேர்ச்சியினை அதிகரித்தல் மற்றும் ஊழியர்களுக்கான மீள் தொழில் வழங்கல் என்பவற்றை வழங்குவதற்கான இத்தீர்மானங்கள் சட்டங்களில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு ஏற்கனவேயுள்ள சட்டங்கள் திருத்தப்படவேண்டும். அதற்கமைய, வெளிநாட்டு முதலீடு வாய்ப்புக்களை இழப்பதற்கு இலங்கை தொழில் சட்டங்களில் காணப்படுகின்ற கடினத்தன்மையும் ஒரு காரணமாகக் காணப்படுவதனால் தமது ஊழியர்களை முகாமைசெய்வதில் தொழில்தருநருக்கு நெகிழ்வுத்தன்மையினை வழங்கும் விதத்தில் ஏற்கனவேயுள்ள தொழில் சட்டங்கள் திருத்தப்படவேண்டும். இதற்கு மேலதிகமாக, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணியாற்றுதல், பகுதிநேரப் பணி, நெகிழ்வுமிக்க பணி மணித்தியாலங்கள் போன்ற பணி முறைகளை கம்பனிகள் மேற்கொள்ள இட்டுச்சென்றதுடன் இவை நோய்த்தொற்று சகாப்தற்குப் பின்னரும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, புதிய தொழில் மாதிரிகள் மற்றும் பணிமுறைகளுக்கேற்ப ஏற்கனவேயுள்ள தொழில் சட்டங்கள் நவீனமயப்படுத்தப்படவேண்டும். இத்திருத்தங்கள் தமது இணைத்தரப்புடன் ஒப்பிடுகையில் கணிசமாக குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்ற பெண் தொழிற்படைக்கு தூண்டுதலுமளிக்கும்.

- **முறைசாராத் துறைகளை நோக்கிய இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளின் முக்கியத்துவம் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியின் போது தோற்றம்பெற்றது.** கடுமையான தொழில் சட்டங்களுக்கு மத்தியில் தொழிலின்மை நலத்திட்டங்கள் கிடைக்கப்பெறாமையினால் இலங்கையின் தொழிற்படையின் பிரதான பாகம் முறைசார தொழிலை நோக்கிக் கவரப்படுகின்றது. அதற்கமைய, முறைசாரா தொழில்நிலையானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தொழிற்படை அளவீடு 2019இன் பிரகாரம் இலங்கையின் மொத்தத் தொழில்நிலையில் 57.4 சதவீத பாரிய பங்கொன்றிற்கு வகைகூறுகின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு மத்தியில் முறைசாராத் துறையானது வருமானமொன்றினை ஈட்டிக்கொள்வதற்கு தமது இயலளவிற்கு தீவிரமான இடையூறுகளை அவர்கள் எதிர்கொண்டமையினால் தொழிற்படையில் மிகவும் பாதிக்கப்பட்ட பிரிவினராக விளங்கியது. ஏதேனும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினால் முறைசாரா தொழில்துறை பாதுகாக்கப்படாமையினால் இடர் நிலைகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வரக்கூடிய தொழிற்படையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வகையாக அவர்கள் இருந்துவருகின்றனர். எனவே, முறைசாரத் துறைப் பணியாளர்களின் நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கு நாட்டின் பாரிய முறைசாரத் துறையினை நோக்கி இலக்கிடப்பட்ட சமூகப் பாதுகாப்பு வழிமுறைகள், முக்கியமானதாக விளங்குகின்றது.

- **நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிக்கும் இயலளவுடைய எதிர்காலத்திற்குத் தயாரான தொழிற்படையினை உருவாக்குவதில் கல்விசார் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன.** தொடர்ச்சியாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றவாறு தொழிற்சந்தையில் காணப்படுகின்ற கேள்வி மற்றும் நிரம்பல் பொருத்தமின்மைகளை நிவர்த்திசெய்வதற்கும் அதேபோன்று உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் உயர் அத்துடன் தொழில்சார் கல்வி, கேள்வியினால் தூண்டப்பட்ட அறிவினைக் கட்டியெழுப்புதல், தொழிற்படையின் திறன் மற்றும் மனோபாவம் என்பன தொடர்புடைய மறுசீரமைப்புகள் அவசியமாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் கூடிய உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகள் தேர்ச்சிமிக்க உள்நாட்டு தொழிற்படையொன்றின் ஆதரவுடன் உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கைகளுக்கான தேவைப்பாட்டினை மீண்டும் மீட்டது. இந்நோக்கில் 2021 தொடக்கம் 2030 வரையான ஆண்டுகளை 'தேர்ச்சி அபிவிருத்தி தசாப்தம்' என அரசு பிரகடனப்படுத்தியதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கும் வாழ்க்கைத் தரத்தினையும் உள்நாட்டு உற்பத்தியினை மேம்படுத்துவதற்கும் தேர்ச்சிபெற்ற புலம்பெயர்தலினை ஊக்குவிப்பதற்கும், அத்துடன் தேர்ச்சிபெறாத தொழிலாளர்களையும் தொழிலாளர்கள் இறக்குமதி செய்வதனைக் குறைப்பதற்கும் கல்வி முறைமையில் எதிர்பார்க்கப்படும் மாற்றம் முக்கியமாக விளங்குகின்றது. மேலும், முடக்கல் கட்டுப்பாடுகளுடனான காலப்பகுதியின் போது இணையவழித் தளங்களைப் பயன்படுத்துவதில் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்வேகத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்பதும் விரிவுபடுத்துவம் அத்துடன் இலங்கையில் எதிர்காலத்திற்குத் தயாரான தொழிற்படையொன்றினைக் கட்டியெழுப்புவதில் கல்வி முறைமையின் இயலளவினை விரிவுபடுத்தும்பொருட்டு தனியார் கல்வியினை ஊக்குவிப்பதும் முக்கியமானதாக விளங்குகின்றது.